University of Jaffna, Sri Lanka
Faculty of Management Studies and Commerce

# PROCEEDINGS

# 6th International Conference on Contemporary Management 2021

## Issues and Challenges of Sustainable Development: Fostering Resolutions towards Economic Resilience

29th - 30th April 2021

Academic Partner
emerald PUBLISHING

ISSN 2783-8773

# 6th International Conference on Contemporary Management (ICCM) - 2021

©Copy Right : 2021 Faculty of Management Studies and Commerce, University of Jaffna, Sri Lanka.

Published by : Faculty of Management Studies and Commerce, University of Jaffna, Sri Lanka.

URL : https://iccm.maco.jfn.ac.lk

e-mail : iccm2021@maco.jfn.ac.lk

T.P : +94 (0)21 222 3610

Printers : Guru Printers, Thirunelvely, Jaffna, Sri Lanka.

ISSN : 2783-8773

**Disclaimer:**
The contents of the full papers included in the publication proceedings remain with respective authors.

# யாழ்ப்பாணத்து திருக்கோயிற் செல்நெறியில் கோபுரங்கள்: சில சமகால அவதானிப்புகள்.

**ரமணராஜா, சி**
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.*

தமிழர்களின் பண்பாட்டு இருப்பு, தனித்துவ அடையாளம், அறிவியல் வளர்ச்சி என்பவற்றின் நிலைக்களன்களாகத் திகழ்பவை திருக்கோயில்களாகும். கோயிலுருவாக்கம் என்பது மக்களின் வாழ்வியலோடு ஒன்றித்துவிட்ட நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டதே ஆகும். தொடக்க காலத்தில் சிறு அளவில் அமைந்த கோயிலமைப்பு மக்களின் மனப்போக்கிற்கும் ஈடுபாட்டுக்கும் ஏற்றாற்போல படிப்படியாக வளர்ந்து பெரியகோயிலமைப்பைப் பெற்றுள்ளது. மனம் பக்தியில் ஊறிப்போனமையின் விளைவே இத்தகைய கோயிலமைப்புகள் உருவாவதற்கு வழிகோலியது என குறிப்பாகச் சுட்டலாம். திருக்கோயிற் பண்பாட்டு வளர்ச்சியின் படிமுறை நிகழ்வுகள் பலவாகும். கருவறையில் தொடங்கி மண்டபங்கள், தூண்கள், பிராகாரங்கள், விமானம், தூபி, திருச்சுற்று மதில்கள், திருச்சுற்று மாளிகை, மணிக்கோபுரம் மற்றும் கோபுரம் என்றவாறாக அந்நிகழ்வுகள் நீண்டிருந்தன. கோயில்களின் வழியாகச் சமூக உளவியலைத் தமது கட்டுக்குள் வைத்திருக்க கோயிலதிகாரத்தைத் வைத்திருந்தோர் கையாண்ட உத்தி, கோபுர கட்டுமானமும், 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்ற சிந்தனை வழியுருவான வழிபாடுமாகும். யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மைக்காலங்களில் கோபுர கட்டுமானத்தின் பரிமாணம் விசாலமடைந் திருப்பதனைக் காணலாம். குறிப்பாக இருபத்தியோராம் நூற்றாண்டின் முன்னிரு தசாப்தங்களில் மிகப்பரந்த அளவில் கோபுரக் கட்டுமானப்பணி இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இந்த ஆய்வானது, கோபுரங்கள் எழுந்த ஆலயங்களை இனங்காண்டு அவற்றின் சிறப்புகளையும், எழுந்தமைக்கான சமூகக் காரணிகளைக் கண்டறிதலையும் நோக்கமாகக் கொண்டு நிகழ்த்தப்படுகிறது. கள ஆய்வின் மூலம் தகவல்கள் பெறப்பட்டு ஒன்றுதிரட்டப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இதனடிப்படையில் கோபுரங்களின் அமைப்பு முறை, சிறப்பு, எண்ணிக்கை என்பவற்றில் சமூக, பொருளாதாரக் காரணிகள் செல்வாக்குச் செலுத்திவருகின்றன என்பது இந்த ஆய்வின் தற்காலிக் முடிவாகும். திருக்கோயிற் கோபுரங்கள் குறித்த பிராரம்பக்குறிப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கு இந்த ஆய்வு துணையாக அமையும்.

**திறவுச்சொற்கள்:** *யாழ்ப்பாணத்துத் திருக்கோயில்கள்; கோபுரங்கள்; கட்டடக்கலை; சமூக பொருளாதார காரணிகள்*